(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(7).]

# பாராளுமன்றத்தின்
# 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்
## 2025 ஜனவரி 28, செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2025 பெப்ரவரி 18, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

98/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023 அக்டோபர் 22 தொடக்கம் 2024 அக்டோபர் 21 வரையில் பெற்றோலிய விற்பனையின் மூலம் ஈட்டப்பட்ட வரி வருமானம் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியினுள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஈட்டிய இலாபம்/ அடைந்த நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியினுள் எரிபொருள் விற்பனையில் ஏதேனும் மோசடிகள் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், ஒரு லீற்றரிலிருந்து மோசடி செய்யப்பட்ட பணத்தொகை ஒவ்வொரு வகை எரிபொருளின் அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(v) மோசடி செய்யப்பட்ட மொத்த பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) ஒரு லீற்றர் எரிபொருளிலிருந்து மோசடி செய்யப்பட்ட தொகையைக் குறைத்ததன் பின்னர் கிடைக்க வேண்டிய நிவாரணம் தற்பொழுது மக்களுக்கு வழங்கப்படுகிறதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

112/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலயம் தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி வலயத்திற்காக இன்றளவில் கிடைத்துள்ள முதலீடுகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெறுமதி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி முதலீடுகளால் இன்றளவில் உருவாக்கப்பட்டுள்ள நேரடியான மற்றும் மறைமுகமான வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iv) மேற்படி ஏற்றுமதி வலயத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

133/2024

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பில் விசாரணையிலுள்ள ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட மற்றும் பத்து வருடங்களுக்கு மேற்பட்ட குடியியல் வழக்குகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) வழக்கு விசாரணைகளை நிறைவு செய்வதில் ஏற்படுகின்ற தாமதத்தைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

247/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'COVID-19 சந்தேகத்திற்கிடமான மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட நோயாளி களுக்கான சிகிச்சைக்குரிய நடைமுறை வழிகாட்டுதல்கள்' தொடர்பான வெளியீட்டினைப் பற்றி அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வெளியீட்டின் உள்ளடக்கத்திற்கும் விதப்புரைகளுக்கும் பங்களித்த துறைசார் வல்லுனர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவர்கள் துறைசார் வளவாளர்களாகப் பணியாற்றும் போது அவர்கள் இணைக்கப்பட்டிருந்த நிறுவனங்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்;

(iv) அவர்களை நியமிப்பதற்குப் பொறுப்புடைய அதிகாரி யார் என்பதையும்;

(v) அவர்களைத் தெரிவு செய்வதற்குப் பின்பற்றப்பட்ட அளவுகோல்கள் அல்லது அடிப்படைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வெளியீட்டின் பிரிவு 7 தொடர்பில் அவர் அறிந்திருக்கின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்குறிப்பிட்ட பிரிவின் உள்ளடக்கத்திற்கும் விதப்புரைகளுக்கும் பொறுப்பான குறிப்பிட்ட துறைசார் வல்லுனர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) பிரிவு 7 இன் உள்ளடக்கத்தினையும் விதப்புரைகளினையும் உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட செயன்முறை, ஆவணங்கள் மற்றும் உசாத்துணைகள் என்பவற்றினை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) பிரிவு 7 இல் காணப்படும் விதப்புரைகள் உள்நாட்டு அல்லது சர்வதேச மருத்துவ நெறிகள் மற்றும் மருத்துவ மானுடவியல் துறையிலுள்ள நிபுணர்களின் தொழில்சார் அபிப்பிராயத்திற்கு உட்படுத்தப்பட்டதா;

என்பதையும் அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

296/2024

கௌரவ சாமர சம்பத் தசனாயக,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாகாண சபை பாடசாலைகளிலிருந்து தேசிய பாடசாலைகளுக்கு அரச ஆசிரியர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்கள் இணைக்கப்பட்டுள்ள கால எல்லையை மீண்டும் நீடிக்காதிருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி கால எல்லை நீடிக்கப்படாததால், தேசிய பாடசாலைகளில் ஏற்படும் ஆசிரியர் வெற்றிடங்கள் எவ்வாறு சமநிலைப்படுத்தப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2025 பெப்ரவரி 19, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

152/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கெரவலப்பிட்டியவில் நிறுவப்பட்டுள்ள கழிவுகளால் மின்னுற்பத்தி செய்யும் மின்னுற்பத்தி நிலையத்தில் (Waste-to-Energy Power Plant) உற்பத்தி செய்யப்படும் ஒரு அலகு மின்சாரத்திற்கு இலங்கை மின்சார சபை செலுத்தும் விலை யாதென்பதையும்;

(ii) மேற்படி மின்னுற்பத்தி நிலையத்தை மிகச்சிறப்பான முறையில் இயக்குவதற்கு ஒரு நாளைக்கு தேவைப்படும் கழிவுகளின் அளவு எத்தனை மெட்ரிக் தொன்கள் என்பதையும்;

(iii) 2024 ஆம் ஆண்டு மேற்படி மின்னுற்பத்தி நிலையத்திற்கு தினசரி வழங்கப்பட்ட கழிவுகளின் சராசரி அளவு எத்தனை மெட்ரிக் தொன்கள் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மின்னுற்பத்தி நிலையத்திற்கு கழிவுகளை வழங்கும் உள்ளூராட்சி நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) கழிவுகள் எரியூட்டப்பட்டதன் பின்னர் தற்போது மேற்படி மின்னுற்பத்தி நிலைய வளாகத்தினுள் சேர்ந்துள்ள சாம்பலின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மின்னுற்பத்தி நிலையத்திலிருந்து வெளியாகும் சாம்பலை சுற்றாடல் நேயமிக்க வகையில் முகாமைத்துவம் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி மின்னுற்பத்தி நிலையத்திற்கு 2023 ஆம் ஆண்டுக்குரியதாக சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

179/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபை கூட்டிணைக்கப்பட்ட திகதியையும்;

(ii) இலங்கை மின்சார சபைக்காக அரசாங்கம் முதலீடு செய்த மொத்த மூலதனத்தையும்;

(iii) இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்ட மொத்தக் குறுகிய கால மற்றும் நீண்ட கால கடன்களின் மொத்தத் தொகையை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை மின்சார சபையில் பணிபுரிகின்ற நிரந்தர மற்றும் அமய ஊழியர்களின் எண்ணிக்கையை தனித்தனியாகவும்;

(ii) 2024 சனவரி முதல் டிசெம்பர் வரை பணியாட்டொகுதியினருக்கு மாதாந்தம் வழங்கப்பட்ட சம்பளம், மேலதிக நேரம், தொழில் படிகள், மிகையூதியம், போக்குவரத்துச் செலவுகள் மற்றும் வேறு ஏதேனும் ஊதியங்கள் ஆகியவற்றுக்காக மொத்தம் செலவான தொகையை தனித்தனியாகவும்;

(iii) இலங்கை மின்சார சபை அதன் பணியாட்டொகுதியினருக்கான உழைக்கும் போது செலுத்தும் வரியை (PAYE) செலுத்துகிறதா என்பதையும்;

(iv) இன்றேல், உழைக்கும் போது செலுத்தும் வரியை அது செலுத்தாது நிறுத்திய திகதியையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

245/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொலன்னாவை பிரதேச செயலகப் பிரிவில் ஏற்படும் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான உத்தேச கருத்திட்டங்களில் இதுவரை செயற்படுத்தப்படாது எஞ்சியுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அவற்றை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு கருத்திட்டமும் செயற்படுத்தப்படும் காலப்பகுதி, நிதிவசதி பெறப்படும் விதம் மற்றும் செயற்படுத்தும் நிறுவனம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

257/2024

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தின் ‘ஹோலுவகொட’ அபிவிருத்திக் கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமை யாது;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களின் பரப்பளவு எவ்வளவு;

(iii) மேற்படி நிலங்களை விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதில் இன்றளவில் காணப்படுகின்ற தடைகள் யாவை;

(iv) மேற்படி கருத்திட்டத்திற்காக இதுவரையில் செலவிடப்பட்டுள்ள தொகையுடன் ஒப்பிடுகையில், இக்கருத்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் கிடைக்கப்பெற்றுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

440/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரவளை பொது விளையாட்டரங்கு (நகர சபை விளையாட்டரங்கு) விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதற்கு உகந்த நிலையில் காணப்படவில்லை என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டரங்கில் நீர் வழிந்தோடுவதற்கு முறையான வழிமுறையொன்று இல்லை என்பதையும்;

(iii) அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள வடிகாலமைப்பின் காரணமாக கிரிக்கட் போட்டிகளை நடாத்த முடியாதுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை மேற்படி விளையாட்டரங்கை நவீனமயப்படுத்த செலவிடப்பட்ட தொகை ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டரங்குக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு சம்பந்தமான விசாரணை நடாத்தப்படுமா என்பதையும்;

(iii) பண்டாரவளை பிரதேச விளையாட்டு வீரர்களுக்கு மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு பயன்படுத்தக் கூடியவகையில் மேற்படி விளையாட்டரங்கை நவீனமயப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2025 பெப்ரவரி 20, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

322/2024

கௌரவ அஜித் கிஹான்,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்திலுள்ள அதிகமானோர் இத்தாலியில் தொழில் புரிவதோடு அவர்களது சாரதி அனுமதிப் பத்திரத்தை புதுப்பித்துக் கொள்ள இயலாதுள்ளமை முக்கியமானதொரு பிரச்சினையாக மாறியுள்ளது என்பதை அவர் அறிவாரா;

(ii) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iii) வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஈடுபட்டுள்ள இலங்கைப் பணியாளர்கள் மனிதாபிமானமற்ற சித்திரவதைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர் என்பதை அறிவாரா;

(iv) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(v) வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாக உறுதியளித்து பணமோசடி செய்கின்ற நிறுவனங்கள்/நபர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

(vi) மோசடி செய்துள்ள பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

379/2025

கௌரவ ரோஹித அபேகுணவர்தன,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு சிறைச்சாலை வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அத்தகைய சிறைச்சாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளில் தற்போது காணப்படுகின்ற குறைபாடுகள் யாவையென்பதையும்;

(iii) சிறைச்சாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்படும் நபர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள புனர்வாழ்வளிப்பு நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய புனர்வாழ்வளிப்பு நிலையங்களில் தற்போது புனர்வாழ்வளிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நிலையம் வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும்போது பின்பற்றப்படும் வழிமுறைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

422/2025

கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்திலுள்ள, மாகாண சபைக்குச் சொந்தமான மருத்துவமனைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த மாவட்டத்தில், மருத்துவமனை சேவை அல்லாத வேறு சுகாதார சேவைகளை வழங்கும் நிலையங்கள்/நிறுவனங்களை மாகாண சபை கொண்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நிலையங்கள்/நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(iv) களுத்துறை மாவட்டத்தில் காணப்படும் நிரல் அமைச்சுக்குச் சொந்தமான மருத்துவமனைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) அந்த மாவட்டத்தில், மருத்துவமனை சேவை அல்லாத வேறு சுகாதார சேவைகளை வழங்கும் நிலையங்கள்/நிறுவனங்களை நிரல் அமைச்சு கொண்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், அந்த நிலையங்கள்/நிறுவனங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ)(ii) மற்றும் (v)இல் குறிப்பிடப்பட்டுள்ள நிலையங்கள்/நிறுவனங்களில் தொற்றாத நோய்களுக்கான சிகிச்சை பிரிவுகள் நிறுவப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவற்றின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவை நிறுவப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

424/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வவுனியா நகருக்கான குடி நீர் விநியோகத் திட்டம், 2010-2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைமுறைப் படுத்தப்பட்டதுடன், இத்திட்டத்திற்காக வயல் நிலங்கள், மேட்டுக் காணிகள், குடியிருப்புக்கள் மற்றும் மதத்தலங்கள் ஆகியன சுவீகரிக்கப்பட்டன என்பதையும்;

(ii) விவசாயிகள் மற்றும் காணி உரிமையாளர்களைப் பாதிக்காத வகையில், இது தொடர்பில் விவசாய அமைப்புகள், பிரதேச செயலாளர் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆகிய தரப்புகளுக்கு இடையே முத்தரப்பு ஒப்பந்தமொன்று 2013.11.05 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது என்பதையும்;

(iii) சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளுக்குப் பதிலாக வழங்கப்பட்டுள்ள மாற்றுக் காணிகளுக்கு இதுவரையில் பூரண அளிப்புப்பத்திரங்களை வழங்குதல், முறையான நீர்ப்பாசன வசதிகள் மற்றும் உட்பிரவேசப் பாதைகளை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல் ஆகியன மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iv) பாதிக்கப்பட்டுள்ள விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மேற்படி குடிநீர் விநியோகத் திட்டத்தின் கீழ் இதுவரையில் தொழில் வாய்ப்புகள் வழங்கப்படவில்லை என்பதையும்;

(v) அணைகளிலிருந்து வெளியேறும் மேலதிக நீரை கமநல அபிவிருத்தி திணைக்களத்துக்கு சொந்தமான, புனரமைக்கப்பட்டுள்ள குளங்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

425/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.01.01 தொடக்கம் 2024.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் நாய்க்கடிக்கு ஆளாகி சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியினுள் நாய்க்கடிக்கு ஆளாகிய திருகோணமலை மாவட்டத்தில் வசிக்கும் நபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) குறித்த காலப்பகுதியினுள் கட்டாக்காலி நாய்க்கடிக்கு ஆளாகிய திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த நபர்களின் எண்ணிக்கை மேற்படி மாவட்டத்தின் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரதேசத்திற்கமைய வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iv) மேற்படி காலப்பகுதியினுள் நாய்க்கடிக்கு அதிகமாக ஆளாகிய நபர்கள் வசிக்கும் மாவட்டம் யாதென்பதையும்;

(v) நாய்க்கடிக்கு ஆளாகின்ற நபர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக வருடாந்தம் செலவு செய்யப்படும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(vi) நாய்க்கடிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 பெப்ரவரி 21, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

384/2025

கௌரவ வருண லியனகே,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை பல்வேறு இயற்கை அனர்த்தங்களால் ஏற்பட்ட உயிர்ச் சேதம், அழிவடைந்த சொத்துக்கள் மற்றும் தொழில்முயற்சிகளுக்காக செலுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை மற்றும் செலுத்த வேண்டியுள்ள இழப்பீட்டு நிலுவை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட காப்புறுதி திட்டமானது, 03/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் தாபிக்கப்பட்டுள்ளதுடன், அது அனர்த்தங்களை எதிர்கொண்டுள்ள மக்களுக்கு பெரும் நிவாரணமாக அமைந்துள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) இலக்கம் 01/2020 கொண்ட சுற்றறிக்கையின் மூலம் ரூ. 10,000/= இலும் கூடிய இழப்பீட்டுத் தொகையைப் பெற காணி உரிமையை அத்தாட்சிப்படுத்த வேண்டுமென பணிக்கப்பட்டுள்ளதால் பெரும் எண்ணிக்கையான குடும்பங்களுக்கு இழப்பீடு கிடைக்காததை அறிவாரா என்பதையும்;

(iv) அனர்த்தங்களால் பாதிக்கப்படுகின்ற குடும்பம் ஒன்றுக்குத் தேவையான உலர் மற்றும் சமைத்த உணவுகளை வழங்க, நாளொன்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதாததை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) அனர்த்த இழப்பீட்டு மதிப்பீடு நிமித்தம், 2020.09.09ஆம் திகதிய, NBRO/FL/DA/IN/R5 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுப் பெறுமதி போதுமானதாக இல்லை என்பதால், மதிப்பீட்டுப் பெறுமதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

386/2025

கௌரவ சானக மாதுகொட,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலகின் பல நாடுகளைச் சேர்ந்த பிரசைகள் E-8 வீசா முறையின் கீழ் தென் கொரியாவுக்கு தொழில் நிமித்தம் செல்வதை அறிவாரா என்பதையும்;

(ii) E-8 வீசா முறையின் கீழ் தென் கொரிய தொழில் வீசா பெற்ற இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் திருப்பி அனுப்பப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி இலங்கையர்களுக்கு தென் கொரியாவில் தொழில் புரிவதில் காணப்படுகின்ற தடைகள் யாவை என்பதையும்;

(iv) E-8 வீசா முறையின் கீழ் தென் கொரிய தொழில் வீசா பெற்ற இலங்கையர் களுக்கு நியாயத்தை நிலைநாட்ட மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

388/2025

கௌரவ சந்தன சூரியஆரச்சி,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட கிழக்கு ஹேவாகம் கோரளே கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கி முறைமையில் பணத்தை வைப்பிலிட்ட வைப்பாளர்களுக்கு அப் பணம் மீண்டும் பெற்றுக் கொடுக்கப்படவில்லை என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை;

(iii) மேற்படி வங்கி முறைமையில் நிதி மோசடி இடம்பெற்றுள்ளதா;

(iv) ஆமெனில், மேற்படி மோசடி இடம்பெற்றுள்ள காலப்பகுதி யாது;

(v) பணத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ள வைப்பாளர்களின் எண்ணிக்கை யாது;

(vi) இவர்களின் வைப்புப் பணத்தை மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(vii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி சங்கத்தின் பணிப்பாளர் சபை பதிவு செய்யப்படவில்லை என்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவை;

(iii) மேற்படி பணிப்பாளர் சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iv) மேற்படி நிதி மோசடி தொடர்பில் அப்போதைய மாகாண சபை மற்றும் சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(v) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

(vi) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

417/2025

கௌரவ அருண பனாகொட,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு, மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹோமாகம, மத்தேகொட வீடமைப்புக் கட்டிடத் தொகுதியின் மலக்கழிவு அகற்றும் முறைமை பல வருடங்களாக செயலிழந்துள்ளது என்பதையும்;

(ii) தற்போது மேற்படி மலக்கழிவு அகற்றும் முறைமையைச் சுற்றி தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை வேலியொன்றை நிர்மாணித்து வருகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வேலியை நிர்மாணிப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அதன் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்த திகதி மற்றும் நிறைவு செய்ய வேண்டிய திகதி என்பன வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்த நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒப்பந்த நிறுவனத்தை தெரிவு செய்யும்போது, உரிய கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) மேற்படி வேலியை நிர்மாணிப்பதால் பொதுமக்கள் சுமார் 40 வருடங்களாகப் பயன்படுத்தி வருகின்ற வீதிக்கு அது இடையூராக உள்ளதை அறிவாரா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி நிலைமையைச் சீர்செய்வதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

420/2025

கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள காடுகளின் அளவு ஏக்கர்களில் யாதென்பதையும்;

(ii) அவற்றுள் காட்டு யானைகள் வாழ்வதற்கு பொருத்தமான சூழலைக் கொண்ட காடுகளின் அளவு ஏக்கர்களில் யாதென்பதையும் ;

(iii) அக்காடுகளில் வாழும் காட்டு யானைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) காட்டு யானைகள் மனிதர்களுக்கும், அவர்களுடைய உடைமைகளுக்கும் அழிவை ஏற்படுத்துகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(v) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை காட்டு யானைகளால் தாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, அத்தாக்குதல் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் யானை-மனித மோதல் காரணமாக இறந்த காட்டு யானைகளின் எண்ணிக்கை என்பன வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) காடுகளின் அடர்த்தியை விடவும் அதிகமான காட்டு யானைகள் காடுகளில் வாழ்வதை அறிவாரா என்பதையும்;

(ii) காடுகளின் அடர்த்திக்கு ஏற்ப காட்டு யானைகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்த வேண்டியேற்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கான பொறிமுறைகள் யாதென்பதையும்;

(iv) அது எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(v) ஆமெனில், காட்டு யானைகளால் ஏற்படும் அழிவுகளை கட்டுப்படுத்த ஏதேனுமொரு வழிமுறை உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2025 பெப்ரவரி 22, சனிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

423/2025

கௌரவ டி.கே. ஜயசுந்தர,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் தேயிலைக் கைத்தொழிற் துறை 2010ஆம் ஆண்டு தொடக்கம் வீழ்ச்சியடைந்து வருகின்றது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) தேயிலை மீள் செய்கைக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட 'ஸ்டார்' கருத்திட்டத்திற்கு நிதி வழங்கிய நிறுவனம் யாதென்பதையும்;

(iii) வழங்கப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அது கடனாகவா, இன்றேல், நன்கொடையாகவா வழங்கப்பட்டது என்பதையும்;

(v) கடனாக இருப்பின், வருடாந்த வட்டி வீதம் யாதென்பதையும்;

(vi) மேற்படி கடன் தொகையைச் செலுத்தி முடிக்கும் வருடம் யாதென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் நிருவாகக் கட்டமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆட்கள் யாவர் என்பதையும்;

(ii) அதனூடாக தேயிலை மீள் செய்கை மேற்கொண்டுள்ள காணியின் அளவு, ஒவ்வொரு தேயிலைப் பரிசோதகர் பிரிவுக்கமைவாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ், தேயிலை மீள் செய்கை மேற்கொள்ளும் ஒரு ஏக்கர் காணிக்குச் செலுத்தப்பட்ட பணத்தொகை மற்றும் நிருவாகச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) இன்றளவில் மேற்படி கருத்திட்டத்தை நிறைவு செய்திருப்பின், அதனை நிறைவு செய்த திகதி யாதென்பதையும்;

(ii) செய்கையாளர்களுக்கு நிலுவைப் பணம் செலுத்த வேண்டியிருப்பின், அது ஒவ்வொரு தேயிலைப் பரிசோதகர் பிரிவுக்கமைவாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் மேலும் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

431/2025

கௌரவ தனுஷ்க ரங்கநாத்,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் 'ஐ ரோட்' கருத்திட்டத்தின் கீழ் KL 2 கருத்திட்டம் (களுத்துறை பெகேஜ் 2) என்ற பெயரில் ஒரு கருத்திட்டம் இருந்ததென்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட ஒப்பந்த நிறுவனங்கள் சட்ட நடவடிக்கை மேற்கொண்டதன் விளைவாக மேற்படி கருத்திட்டமானது இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இதன் காரணமாக அப்பிரதேச மக்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் அகலவத்தை மற்றும் மத்துகம தேர்தல் தொகுதிகளில் அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த வீதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்துடன் தொடர்புடைய ஒப்பந்த நிறுவனம்/நிறுவனங்கள் யாதென்பதையும்;

(iii) அந்த நிறுவனத்தின்/நிறுவனங்களின் உரிமையாளர்கள் யாவரென்பதையும்;

(iv) மேற்படி சட்ட நடவடிக்கைகளின் தற்போதைய நிலை யாதென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

433/2025

கௌரவ தினிந்து சமன்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை, மீகஹகிவுல புதிய நகர நிர்மாணத்திற்கு இணையாக மீகஹகிவுல பஸ்தரிப்பிடத்தை அமைப்பதற்காக செலவிடப்படும் தொகை யாது;

(ii) இதுவரை மேற்படி பஸ்தரிப்பிடம் பயன்பாட்டுக்கு உட்படுத்தப்படவில்லை என்பதை அறிவாரா;

(iii) அவ்வாறாயின் அதற்கான காரணங்கள் யாவை;

(iv) மேற்படி பஸ்தரிப்பிடத்தை மக்களின் பாவனைக்காக வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(v) மேற்படி பஸ்தரிப்பிடத்திற்கான நுழைவுப் பாதையை நிர்மாணிக்க எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பஸ்தரிப்பிடம் பயனற்ற ஒரு நிர்மாணம் என்பதை ஏற்றுக்கொள்வாரா?

(ii) அவ்வாறாயின், அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய நபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iii) எதிர்காலத்தில் இத்தகைய நிலைமைகள் ஏற்படாமலிருக்க உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கும் வழிகாட்டல்கள் யாவை;

என்பதை அவர் மேலும் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

436/2025

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காணப்படுகின்ற உடற்பிடிப்பு நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(ii) அத்தகைய நிலையங்கள் அமைக்கப்படுவதற்கான வழிமுறைகள் யாது;

(iii) உடற்பிடிப்பு நிலையங்களை அமைக்கும்போது 2023 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க ஆயுர்வேத (திருத்தச்) சட்டம் ஏற்புடையதா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

(v) உடற்பிடிப்பு நிலையங்களை அமைக்கும்போது உரிய பிரதேசத்தின் உள்ளூர் அதிகாரசபை, இலங்கை பொலிஸ், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை போன்ற நிறுவனங்கள் ஏதேனும் பொறுப்பை கொண்டுள்ளனவா;

(vi) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

438/2025

கௌரவ நிசாந்த பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எல்பிடிய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளின் அளவு ஏக்கர்களில் எவ்வளவென்பதையும்;

(ii) அவ் அளவு ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவு வாரியாக ஏக்கர்களில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) அக்காணிகளில் இரண்டாம் தரப்புகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு ஏக்கர்களில் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி காணிகள் வழங்கப்பட்டுள்ள இரண்டாம் தரப்பினரின் பெயர், அந்த ஒவ்வொரு தரப்புக்கும் காணிகள் வழங்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் காணிகள் வழங்கப்பட்டதன் அடிப்படை வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 பெப்ரவரி 24, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

445/2025

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டீ. சூரிய பண்டார,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முப்படைக்கான விசேட ஆட்சேர்ப்பு (இராணுவம்சார்) முறையின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட படை வீரர்கள் பல்வேறு தொழில்களில் கடமை நிமித்தம் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) இவர்கள் அந்த சேவைகளுக்கே தனித்துவமான சீருடைகளின்றி சிவில் உடையில் அல்லது வேலைக்கான உடை அணிந்து கடமையாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அதற்கு உட்பட்டதாக இலங்கை கடற்படையின் தகவல் தொழில்நுட்ப பிரிவில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 43 படை வீரர்களுக்கு சீருடைகள் அணியுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதால் சிக்கல் தோன்றியுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) விசேட ஆட்சேர்ப்பின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு இன்றளவில் சேவையிலுள்ள படைவீரர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) இவர்களுக்குரிய கடமைகள் மற்றும் உரித்தான சலுகைகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) சிவில் உடைக்கு மேலதிகமாக சேவைகளுக்கே தனித்துவமான சீருடைகளை இவர்கள் அணிய முடியுமா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அதற்கான சந்தர்ப்பங்கள் யாவை என்பதையும்;

(v) இவர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள்/சுற்றறிக்கைகள்/கட்டளைகள் யாரால் வழங்கப்படுகின்றன என்பதையும்;

(vi) நிறுவனத் தலைவரின் தற்றுணிபின்படி இவர்களை சீருடை அணியுமாறு கட்டளையிட முடியுமா என்பதையும்;

(vii) (அ)(iii) இல் குறிப்பிட்டுள்ளவாறு படைவீரர்கள் சேவைக்கான சீருடை அணிந்தவாறு கடமையில் ஈடுபடுகின்றனரா என்பதையும்;

(viii) இன்றேல், சிவில் அல்லது வேலைக்கான உடை அணிந்து கடமையில் ஈடுபடுகின்றனரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

446/2025

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா,— கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் புதிய கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) கைத்தொழில் பேட்டைகளில் குத்தகை அடிப்படையில் கைத்தொழில்களை நிறுவுகையில், பல்வேறு நிறுவனங்களிடமிருந்து அங்கீகாரத்தை பெறுவதற்கு முதலீட்டாளர்களுக்கு நீண்ட காலம் காத்திருக்க வேண்டியுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி குத்தகை உடன்படிக்கைகளை தயாரிக்கும் செயற்பாடுகளில் காணப்படும் தேவையற்ற தாமதத்தை தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) சம்பந்தப்பட்ட சகல நிறுவனங்களையும் இணைத்து இலகுவான செயன்முறையொன்றை தயாரிப்பதற்கான இயலுமை உள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி செயன்முறையை தயாரிப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

447/2025

கௌரவ ருவன் விஜேவீர,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமாகவிருந்த காணியின் அளவு ஆண்டுவாரியாக ஹெக்டெயார்களில் வெவ்வேறாக எவ்வளவு;

(ii) வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமாகவிருந்த காணியின் அளவில் மாற்றங்கள் ஏற்படுவதில் தாக்கம் செலுத்திய அடிப்படைக் காரணிகள் யாவை;

(iii) வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அடிப்படைப் பணிப்பொறுப்பு யாது;

(iv) மேற்படித் திணைக்களத்திற்கு சொந்தமான காணிகளை பொது மக்களின் பாவனைக்கு ஈடுபடுத்துவதற்கு ஏதுவான ஏற்பாடுகள் உள்ளதா;

என்பதை அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

449/2025

கௌரவ பத்மசிரி பண்டார,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான மோதர மற்றும் மாளிகாவத்தையில் அமைந்துள்ள பிரதீபா மண்டபங்கள் அரசியல் ஆதரவாளர்களுக்கு 30 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளனவா;

(ii) இவற்றை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு முன்னர் இவற்றின் மதிப்பீட்டுப் பெறுமதி அரசாங்கத்தின் பிரதம மதிப்பீட்டாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு பிரதீபா மண்டபத்தினதும் மதிப்பீட்டுப் பெறுமதி தனித்தனியாக யாது;

(iv) மேற்படி பிரதீபா மண்டபங்களை குத்தகைக்கு வழங்குகையில் முறையான பெறுகை செயன்முறையொன்று பின்பற்றப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் மத்தேகொட வீடமைப்புத் தொகுதியில் பௌத்த மையத்துக்கு அண்மித்தாக அமைந்துள்ள 116 பர்ச்சஸ் பரப்பளவிலான காணியில் ஒரு பர்ச்சஸ் தலா ரூ.5 இலட்சத்திற்கு வழங்கப்பட்டுள்ளதா:

(ii) மேற்படி காணித் துண்டுகள் யாருக்கு வழங்கப்பட்டுள்ளன;

(iii) இவை வீடுகளை நிர்மாணிக்கும் நோக்கத்துக்காக வழங்கப்பட்டுள்ளனவா;

(iv) இது தொடர்பில் அரசாங்கத்தின் பிரதம மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீட்டுப் பெறுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

453/2025

கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்,— பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்வேறு இயற்கை மற்றும் சமூகப் பிரச்சினைகள் காரணமாக மலையக பெருந்தோட்டங்களில் வசிக்கின்ற மக்கள் பாரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) பாதிக்கப்பட்டவர்களில் வீடுகளை இழந்த தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இவர்கள் எவ்வளவு காலமாக தற்காலிக வீடுகளில் வசித்து வருகின்றனரென்பதையும்;

(iv) மேற்படி மக்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக்கொடுப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 பெப்ரவரி 25, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

6/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர் மாவனெல்லை பிரதேசத்தில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவம் பதிவாகிய திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி சம்பவத்திற்காக கைதுசெய்யப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவத்தை விசாரணை செய்த பாதுகாப்பு அலுவலர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டபோது அந்தப் பாதுகாப்பு அலுவலர்களுக்கு அழுத்தம் பிரயோகித்த அப்போதைய ஆளுநர்கள் மற்றும் அரசாங்கத்தில் பலம்வாய்ந்த நபர்களின் பெயர்கள் தனித்தனியே யாவையென்பதையும்;

(iii) மேற்படி சம்பவம் தொடர்பான விசாரணைகளின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

62/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.01.01 ஆம் திகதியிலிருந்து இதுவரை சாதாரண சேவையின் கீழ் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு கிடைத்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை மாத வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) சாதாரண சேவையின் கீழ் வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களை வழங்குவற்கு அறவிடப்படும் கட்டணம் யாதென்பதையும்;

(iii) சாதாரண சேவையின் கீழ் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கு துரிதமாக வெளிநாட்டுக் கடவுச்சீட்டுக்களை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

66/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின், கோரளைப்பற்று – வடக்கு, வாகரை பிரதேச செயலகப் பிரிவில் சட்ட விரோதமாக இல்மனைட் அகழ்வு மேற்கொள்ளப் படுகின்றது என்பதையும்;

(ii) இதன் காரணமாக அப்பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு சுகாதாரம், வாழ்வாதாரம் மற்றும் குடிநீர் சார்ந்த பிரச்சினைகள் ஏற்படக் கூடுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், சட்ட விரோதமாக மேற்கொள்ளப்படும் இல்மனைட் அகழ்வுச் செயற்பாடுகளைத் தடை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

82/2024

கௌரவ ரோஹண பண்டார,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் வசமுள்ள விமானங்களின் எண்ணிகை யாதென்பதையும்;

(ii) அந்நிறுவனம் எவ்வெவ் விமானச்சேரிடங்களுக்கு சேவையை வழங்குகிறது என்பதையும்;

(iii) தற்போது மேற்படி நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனத்தை மேலும் வலுவூட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

90/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி அரிசி எந்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்பதையும்;

(iv) மேற்படி அரிசியை இறக்குமதி செய்த நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(v) அரிசி இறக்குமதியைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 பெப்ரவரி 27, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

105/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பரீட்சையின் வினாத்தாள்கள் அல்லது வினாத்தாள்களில் உள்ளடங்கியுள்ள வினாக்கள், மேற்படி பரீட்சை நடைபெற்ற திகதிக்கு முன்னர் வெளித்தரப்பினருக்கு கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இதன் காரணமாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

153/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் ஒவ்வொன்றினதும் நிர்மாணப் பணிகள் தொடங்கப்பட்ட ஆண்டு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் ஒவ்வொன்றினதும் கொள்ளளவு (Installed Capacity) வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) 2022ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரை மேற்படி ஒவ்வொரு காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் மூலமாக தேசிய மின்சாரக் கட்டமைப்புடன் சேர்க்கப்பட்டுள்ள வலுசக்தியின் அளவு ஒவ்வோர் ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) இலங்கையில் காற்றாலை மூலமான மின் உற்பத்தியை அதிகரிக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

188/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை யானை வேலிகளை அமைப்பதற்கும் பராமரிப்பதற்கும் செலவிடப்பட்டுள்ள தொகை ஒவ்வோர் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் யானை-மனித மோதல்களால் உயிரிழந்த யானைகளினதும், ஆட்களினதும் எண்ணிக்கை மற்றும் சொத்துச் சேதங்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) யானை வேலிகளை அமைப்பதற்கும் அவற்றைப் பராமரிப்பதற்கும் செலவிடப்பட்டுள்ள தொகைக்கு நிகராக, யானை-மனித மோதலுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்காததை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், யானை-மனித மோதலுக்கு நிரந்தர தீர்வொன்றை வழங்குவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

291/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “கொவிட் – 19” பெருந்தொற்றினால் பீடிக்கப்பட்டு உயிரிழந்தவர்களை நல்லடக்கம் செய்வதற்கு பொருத்தமான இடமாக அடையாளம் காணப்பட்ட மட்டக்களப்பு “மஜ்மா நகர்” மயானமானது இடுகாடுகள், சுடுகாடுகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் உரித்தாகும் உள்ளூராட்சி நிறுவனம் யாது;

(ii) மேற்குறிப்பிட்ட மயானத்தின் பரப்பளவு யாது;

(iii) மேற்குறிப்பிட்ட காணி அரசாங்கத்துக்கு உரித்தானதா;

(iv) ஆமெனில், மேற்படி காணி சட்டரீதியாக சுவீகரிக்கப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை சமர்ப்பிப்பாரா?

(v) மேற்படி சுவீகரிப்புக்கான நட்ட ஈடு செலுத்தப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மயானத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ள நிதித்தொகை மற்றும் தனிப்பட்ட தரப்பினர்களிடமிருந்து நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றுள்ள நிதித்தொகை வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தனியார் தரப்பினரால் வழங்கப் பட்டுள்ள இயந்திரசாதனங்கள் உள்ளிட்ட ஏனைய சொத்துக்கள் யாவை?

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

389/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தலைவர் உள்ளடங்கலாக, தற்போதைய ஊவா மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ள அங்கத்தவர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தலைவர் உள்ளடங்கலாக அத்தகைய ஒவ்வோர் உறுப்பினரதும் பெயர், இதற்கு முன்னர் பணியாற்றிய நிறுவனம், வகித்த பதவி மற்றும் நிறைவேற்றிய சமூகப் பணிப்பொறுப்பு என்பன வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தலைவருக்கும் மற்றைய அங்கத்தவர்களுக்கும் செலுத்தப்படும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) இதற்கு முன்னர் இயங்கிய ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டிருந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2025 பெப்ரவரி 28, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

258/2024

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி துறைமுகப் பிரதேசத்தை அண்மித்ததாக நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள 'துறைமுக நகரம்' கருத்திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் நன்மைகள் யாவை;

(ii) மேற்படி கருத்திட்டத்தினால் ஏற்படும் சூழல் தாக்கம் குறித்து சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(iii) இதற்கு முன்னர் பொதுமக்களினால் முன்னெடுக்கப்பட்டிருந்த எதிர்ப்பின் விளைவாக மேற்படி கருத்திட்டத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் யாவை;

(iv) உத்தேச கருத்திட்டம் காரணமாக மக்களது வாழ்க்கையில் ஏற்படும் தாக்கம் குறித்து கருத்திற் கொள்ளப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

273/2024

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு நகரிலுள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான மொத்தக் காணியின் அளவு வெவ்வேறாக அடையாளம் காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி காணிகளுள் முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கு பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் காணிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு காணியிலும் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் முதலீட்டுக் கருத்திட்டங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

303/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய கம்பனிகள் பதிவாளரின் பெயரையும்;

(ii) 2015 முதல் 2024 வரையில் கம்பனிகள் பதிவாளர் பதவியினை வகித்தவர்களின் பெயர்களையும்;

(iii) இற்றைவரையில் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தினால் ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனிகளின் மொத்த எண்ணிக்கையினையும்;

(iv) 2010, 2015, 2020, 2021, 2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகள் ஒவ்வொன்றிலும், மேலும் 2025 ஆம் ஆண்டில் இற்றைவரையில் ஒருங்கிணைக்கப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கையினை வெவ்வேறாகவும்;

(v) ஒரு கம்பனியினை ஒருங்கிணைப்பதற்கு எடுக்கும் சராசரி காலத்தினையும்;

(vi) மேலே (iii) இற்கு அமைவாக கம்பனிகளின் ஒருங்கிணைப்பு மூலம் திணைக்களத்தினால் ஈட்டப்பட்ட மொத்த வருமானத்தினையும்;

(vii) மேலே (iii) இற்கு அமைவாக தற்போது இயங்கும் செயல்முனைப்பான கம்பனிகளின் எண்ணிக்கையினையும்;

(viii) கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் முழுவதும் தன்னியக்கமாக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

426/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள, தேசிய இளைஞர் படையணிப் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிற்கமைவாக எத்தனை;

(ii) கிண்ணியா பிரதேசத்தில் நிறுவப்பட்டிருந்த பயிற்சி நிலையம் மூடப்பட்டுள்ளதுடன் அது வேறொரு பிரதேசத்தில் நிறுவப்பட்டுள்ளதை அறிவாரா;

(iii) மேற்படி பயிற்சி நிலையம் மூடப்படுவதற்கான காரணங்கள் யாவை;

(iv) அதனை வேறொரு பிரதேசத்தில் நிறுவுவதற்கான காரணங்கள் யாவை;

(v) மேற்படி பயிற்சி நிலையத்தை மீளத்திறப்பதில் தடையேதும் உள்ளதா;

(vi) இன்றேல், மேற்படி பயிற்சி நிலையத்தை மீளத்திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா;

(vii) ஆமெனில், அதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

432/2025

கௌரவ அஜித் கிஹான்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் சட்டரீதியான உரிமங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் மணல், சரளைக் கற்கள், மண் மற்றும் குளங்களை அகழ்தல் போன்ற நடவடிக்கைகள் தரநிலைகளுக்கு புறம்பாக மேற்கொள்ளப்படுவதால் அதிகளவிலான சுற்றாடல் அழிவுகள் இடம்பெற்று வருகின்றமையை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி அகழ்வு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கான முறையியல் ஒன்று உருவாக்கப்படுமா என்பதையும்;

(iii) மணல், சரளைக் கற்கள், மண் மற்றும் குளங்களை அகழ்தல் போன்ற நடவடிக்கைகளுக்காகவும் மற்றும் அதற்கான போக்குவரத்து அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பாகவும் புதிய முறையியலொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வடமேல் மாகாணத்தில் பாரிய அளவில் சுற்றாடல் அழிவுக்குள்ளாக்கப்பட்டு வரும் நிலையில் வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபையின் தலையீடுகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி அதிகாரசபையின் பொறுப்புக்கள் யாவையென்பதையும்;

(iii) வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபையை தொடர்ந்தும் நடாத்திச்செல்ல வேண்டிய தேவை உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?